பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 20 வியாழக்கிழமை (03 - 02 - 2000) VALAMPURI ஒலி: 46

★ 25 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட

# வளர்மதி, பிரியா, வினோத் ஆகியோர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம்

கொழும்பு விசேட குற்றத் தடுப்பு புலனாய்வுத் துறையினரால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவர்களையும் மற்றும் அவர்களது தாயாரையும் நேற்று நண்பகல் பலாலி இராணுவத் தலைமையகத்தில் வைத்து யாழ் குடாநாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்னா விடுதலை செய்து அவர்களைக் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

யாழ். வயவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி பிரியா (வயது 16) அவரது சகோதரர் யாழ். உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவர் வினோத் (வயது 13) இவர்களது தாயார் சிறிஸ்கந்தராசா வளர்மதி வயது 46) ஆகியோரே நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் விடுவிக்கப்பட்ட பொழுது வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஏ. கே. நடராசா உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை அதிபர் கே.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் எம்மை நல்ல முறையில் உபசரித்து விசாரணை செய்தனர்

தை மாதம் 25ம் திகதி நான் மதிய பேசனம் அருந்தி விட்டு வீட்டில் இருந்த போது, பாடசாலையில் இருந்து எனது மகன் டினோத் பொலிசாரினால் வாகனத்தில் அழைத்துவரப்பட்டார். அப்பொழுது அவரையும் எனது மகளையும் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைக்கு அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவி பிரியாவின் தாயாரான வளர்மதி ஸ்ரீஸ்கந்தராசா [வயது 46) நேற்று பலாலி இராணுவ தலைமை அலுவலகத்தில் வைத்து பத்திரிகையாளர்களிடம்மேற் கண்டவாறு தெரிவித்ததார்கள்

வளர்மதி ஸ்ரீஸ்கந்தராசா கொழும்பு பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

கொழும்பில் தனியான வீடு ஒன்றில் எங்களைத்தங்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவே கொழும்புக்கு அழைத்துச் சென்றேன்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 25 ஆம் திகதி கொழும்பிலிருந்துவந்த விஷேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட வளர்மதி சிறிஸ்கந்தராசா பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில்:

எம்மை விசாரணைக்காக அழைத்துச் சென்ற பொலிஸார் எதுவித அச்சுறுத்தல்களுக்கோ, கொடுமைகளுக்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## மாணவர் விடுதலையைத் தொடர்ந்து இன்று பாடசாலைகள் வழமைக்கு

பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் 3வது நாளான நேற்றும் முழு அளவில் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரித்திருந்தனர்.

இது இவ்வாறு இருக்க பாடசாலை மாணவர்கள் இருவரும் அவர்களது தாயாரும் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று வழமைபோல் பாடசாலைகள் இயங்குமென மாணவர் அமைப்பினர் தெரிவித்ததோடு பகிஷ்கரிப்பு வெற்றி பொறுவதற்குக் துணை நின்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர். (வ)

## கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஈ.பி.டி.பி.முன்நிலையில் விடுவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் பிரியா, வினோத், அவர்களது தாயார் வளர்மதி ஆகியோரை கோப்பாய் பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி வகணிசேகரா அவர்களது உறவினர்களான உரும்பிராய் சிவகுரு வீதியில் உள்ள மார்க்கண்டு மதனேஸ்வரன் இந்துமதி ஆகிய இருவரிடமும் ஒப்படைத்தார்

இச்சம்பவத்தின் போது கோப்பாய் பிரதேசசபை தலைவர் பூ. குணநாயகம் (ஈ. பி. டி. பி.) உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜா, கிராமசேவையாளர், இ. எ. மகாலிங்கம் ஈ. பி. டி. பி.யின் செய்தித் தொடர்பாளர் ஆர். சிறி ஆகியோர் பிரசன்னமாய் இருந்தனர். விடுதலை செய்யப்பட்டவர்களை கோப்பாய் பொலிஸார் தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அவர்களது சொந்த வீடுகளில் கொண்டுபோய் விட்டனர். (வ-ந)

## தனங்களப்பில் கடும் மோதல்

(யர்ழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை வேளையில் தனங்களப்புப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் அகோர மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாகவும் படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் 5 விடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயர் வன்னிசெல்கிறார்

(மன்னார்)

மன்னார் ஆயர் இராசப்பு ஜோசப் நாளை வன்னிக்கு செல்லவுள்ளார். தற்போது வவுனியாவில் தங்கி இருக்கும் ஆயர் தனது வன்னி விஜயத்தின் போது மடுப்பகுதிக்கும் செல்வார். ஆயர் இராசப்பு ஜோசப் வன்னியில் புலிகள் இயக்கப் பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிய வருகிறது. (வ)

## மாணவர்கள் விடுதலைக்கு டக்ளஸ் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விசேட குற்றப்புலனாய் பொலீஸாரினால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் பிரியா, வினோத் அவர்களது தாயார் வளர்மதி ஆகியோரை உடனடியாக விடுவிப்பதற்கு குற்றப்புலனாய்வு விசேட அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைக்கு யாழ். மாவட்ட எம். பியும் ஈ. பி. டி. பி யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவனாந்த நன்றி தெரிவித்துள்ளனர்.

டக்ளஸ் தேவனந்தா மேலும் தெரிவிக்கையில் குற்றத்தடுப்பு புலனாய்வு உயர் அதிகாரி எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியமைக்கு விடுவிக்கப்பட்டவர்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.

## வெள்ளவத்தை சலூனில் கிரனேட் கண்டுபிடிப்பு எட்டுத் தமிழர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை விகாரை லேன் பகுதியில்உள்ள சலூன் ஒன்றில் 'கிரனேட்' ஒன்று நேற்று இரவு 6.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிரனேட் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளவத்தைப் பொலிசார் எட்டு தமிழர்களைக் கைது செய்து இவர்கள் மீது தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கிரனேட் கண்டுபிடிக்கப்பட்ட சலூனுக்கு முன்பாக இராணுவச் சோதனைச் சாவடி ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சலூன் தமிழருக்குச் சொந்தமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கொழும்பு நகரில் தற்கொலை குண்டு தாரிகள் ஊடுருவல்!

[கொழும்பு]

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம் பெற்ற கொழும்பு மாநகர சபை மைதான குண்டு வெடிப்பு சூத்திரதாரி 'தமிழ்ச் செல்வி' என இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில்சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட சுதாகரன்என்பவர் கொடுத்த தகவலை அடுத்தேகொழும்பு குண்டு வெடிப்பு குண்டுதாரி தமிழ்ச் செல்வி என தெரிய வந்தது

தமிழ்ச் செல்வியைத் தவிர மேலும் இரண்டு தற்கொலை குண்டுதாரிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவியிருப்பதாகவும், இவர்கள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா, இராணுவத்தளபதிலால்வீரசூரிய, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த ஆகியோரை இலக்கு வைத்து இவர்கள் ஊடுருவியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு ஒருவருட சிறை

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் அ. இ. அ. தி. மு. கழக பொதுச்செயலாளருமான செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக தமிழக அரசால் தொடுக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் அவருக்கு ஒரு வருட கடும் காவல் சிறைத் தண்டனையை சென்னை தனி நீதிமன்றம் விதித்துள்ளது இவ் வழக்கில் இவருடன் சேர்த்துக் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர்களான செல்வகணபதி, பாளை சண்முகம் ஆகியோரிற்கும், பிளசன்ரே ஹொட்டல் நிர்வாகிகளான பாடேராஜேஸ் மிட்டல் ஆகியோரிற்கும் மேற்படி ஒரு வருடகடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் குற்றறாளிகள் தீர்ப்பை எதித்து மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் (8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகலவிதமான ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், பாட சாலைச் சின்னம், கீற்ரேக் ஆகியவற்றை செய்திட S. S யசோதரன் ஆட்ஸ் 185, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (கி/ 030)


யாழ். மாவட்டத்தில்

# தற்காலிகமாகக் கடமை புரியும் சிற்றூழியர்களுக்கு நியமனம் வழங்குக

## யாழ். மத்திய கல்லூரி அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக பாட சாலைகளில் தொண்டடிப்ப டையில் அல்லது வேறுவகை யில் தற்காலிகமாகக் கடமை புரியும் சகல சிற்றூழியர்க ளுக்கும், அவர்கள் கடமை புரிந்தமையை உறுதிப்படுத்து மிடத்து அந்த சிற்றூழியர்க ளுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வேண்டுகிறோம்

யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை இப் பகுதி பாடசாலைகளில் நில வும் சிற்றூழியர் தர வெற்றி டங்கள் தொடர்பாக ஈ. பி. டி. பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா உள்நாட்டலு வல்கள் அமைச்சர், கல்வி அமைச்சர் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

யாழ்ப்பாண மாவட்டத்தி லுள்ள பாடசாலைகளில் பல சிற்றூழியர் வெற்றிடங்கள் இருக்கின்றன. ஆளணிக் கோப்புக்கு ஏற்ப உள்ள வெற் றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாதுள்ளன.

சில பாடசாலைகளில் மட் டும் வெற்றிடங்களுக்கேற்ப நிவாரண சுகாதாரத் தொழி லாழி, நிவாரணக் காவ லாளி என்போர் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்படு கின்றனர். இந்த அடிப்படை யில் பல பாடசாலைகளில் இப் பதவிகள் வெற்றிட மாகவே உள்ளன. இதனால் பாடசாலைகளில் காவலில் கடமையோ, சுகாதாரக் கட மையோ செய்ய முடியாதுள் ளது.

இவற்றைத் தவிர ஆய்வு கூட உதவியாளர்கள், ஆய்வு கூடத்தொழிலாளி, தோட்ட வேலையாளர், அலுவலக ஊழியர், மைதான ஊழியர், விடுதிகளுக்கான சமையல் காரன், விடுதி மேற்பார்வை யாளர், இயந்திர இயக்குநர் போன்ற இன்னோருள்ள பத விகளுக்கு வெற்றிடங்கள் இருந்தும் நிவாரண அடிப்ப டையில்கூட அவர்கள் நியமிக் கப்பட வாய்ப்புகள் இன்றி யுள்ளன.

அதிகமான பெரிய பாட சாலைக்ள் இவ்வகை ஊழி யர்கள் தத்தமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சிறி யளவு நிதி மூலமோ, பழைய மாணவர் சங்க சிறிதளவு நிதி உதவி மூலமோ அன்றி தொண்டு அடிப்படையிலோ நியமித்து அவர்கள் மூலம் குறிப்பிட்ட சேவைகளைப் பெற்று வருகின்றனர். ஆனால் இவர்களது இத்தகைய நிய மனத்துக்குக்கூட திணைக் களம் அங்கீகாரம் அளிக்க மறுக்கின்றது.

இதன் மூலம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 26/99 இனதும் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. மகிந்த பந்து சேனாவின் 11/309 ஈ 95/20 இலக்க 1999-11-23ம் திகதிய சுற் றறிக்கையின் பிரகாரமும் தற்காலிக அடிப்படையில் கடமை புரியும் ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதில் திணைக்களத்தால் அங்கீ கரிக்கப்பட்ட நிவாரணச் சுகாதாரத் தொழிலாளர், நிவாரணக் காவலாளிக்கு மட்டும் நிரந்தரமாகும் வாய்ப்புண்டு.

தவிர, அதிபர்களால் தற் காலிகமாக நியமிக்கப்பட்டு நீண்ட காலமாக கடமை புரியும் ஏனைய ஊழியர் களுக்கு இந்நியமனம் கிடைக் கும் வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

இதனை எமது சங்கத்தின் 30/01/2000 இல்நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத் தீர்மானத்தின்படி தங்களின் மேலான நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கிறோம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

# மகாபொல கொடுப்பனவு வழங்கப்படும் திகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களுக்கான மகாப்பொலக் கொடுப்பனவு கள் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலின்படி 97/C, 97 BAப கற்கைநெறி மாணவர்களுக்கான 11ம், 12ம் தவணைப் பணக் கொடுப்பனவுகள் இம்மாதம் 1ம், 7ம், திகதிகளிலும், 97/SP, 97/SB கற்கைநெறி மாணவர்களுக்கான 11ம், 12ம் தவணைப் கொடுப் பனவுகளும் 96/SP கற்கை நெறி மாணவர்களுக்கான 20ம் தவணைப் பணக் கொடுப்பனவுகளும் இம் மாதம் 2ம், 8ம் திகதிகளி லும், 96/SP கற்கைநெறி மாணவர்களுக்கான 20ம் தவணைப் பணக்கொடுப் இம்மாதம் 3ம், 9ம் திகதி களிலும்மேற்கொள்ளப்படும்.

கொடுப்பனவுகளைப் பெறும் மாணவர்கள் பல் கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு தவணைப் பணத் தைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# சுப்றா கல்வி நிறுவன ஆதரவுடன் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

சுப்றா கல்வி நிறுவனத் தின் ஆதரவுடன் யாழ்.பல் கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் இலவசமருத் துவ முகாம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு சித்தன்கேணி மாதர் சங்கத்திலும் 11.30 மணிக்கு சுழிபுரம் அண்ணா சனசமூக நிலையத்திலும் 3மணிக்கு வடலியடைப்பு கலைவாணி வீதியிலும் நடைபெறும்.

சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லை வேம்படி கலைவாணி சனசமூக நிலை யத்திலும் 11மணிக்கு தொல் புரம் கலைவாணி சனசமூக நிலையத்திலும் நடைபெறும்

ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு பணிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்திலும் 11மணிக்கு மாவடி சனசமூக நிலையத்திலும் இவ் இல வச மருத்துவ முகாம் நடை பெறும் எனத் தெரிய வருகின்றது. (க)

யாழ். நீதிமன்றத்தில்

# கசிப்பு வைத்திருந்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது!

கசிப்பு வைத்திருந்ததிற்காக 12 நபர்கள் யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதவான் இ. த, விக்கினராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட னர்.

இவர்களை விசாரித்த யாழ் மாவட்ட நீதிபதி இ. த. விக் கினராஜா முதல்தடவை குற்றம் சாட்டப்பட்டவர் களுக்கு 5000 ரூபா தண்டப் பணமாகவும், 1000 ரூபா தர்மப்பணமாகவும் இரண் டாம் தடவை குற்றமிழைத் தவர்களுக்கு 10,000 ரூபா தண்டப்பணமாகவும் 2000 ரூபா தர்மப்பணமாகவும் செலுத்தும்படி உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

தர்மப்பணத்தை, நல்லை ஆதினம், இருபாலை நானான் சிறுவர் நிலையம் தெல்லிப் பழை ஆஸ்பத்திரி உளநலப் பிரிவு ஆகியவற்றுக்கு செலுத் தும்படியும் உத்தரவிட்டுள் ளார். (கு-04)

கரவெட்டிப் பிரதேசசெயலர் பிரிவில்

# நாளையும் நாளை மறுதினமும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செய லர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத் தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளையும் நாளை மறுதினமும் இமை யாணன் மத்தியவிளையாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இதில் நவஜீவன்ஸ் விளை யாட்டுக் கழகம், ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம், டய மன்ஸ் விளையாட்டுக்கழகம் அத்துளு அம்பாள் விளை யாட்டுக் கழகம், மனோகரா விளையாட்டுக்கழகம், கலைம கள் விளையாட்டுக்கழகம், பொமர்ஸ்விளையாட்டுக் கழ கம், சிவகுமாரன் விளை யாட்டுக் கழகம், அண்ணா சிலையடி விளையாட்டுக் கழ கம், கலட்டி ஐக்கியவிளை யாட்டுக்கழகம், இமையா ணன் மத்திய விளையாட்டுக் கழகம் ஆகிய 11 அணிகள் பங்குபற்றவுள்ளனர். (க-27)

## வீதி திருத்தம்

(புலோலி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள துன்னாலை இந்திரன் அம்மன் கோவில் வீதி 1இலட்சத்தி 35'000ரூபா செலவில் திருத்தி புனரமைக் கப்பட்டுள்ளது. அத்துடன் துன்னாலை நுணாவில் குளமும் ஆழமாக்கி 30, ஆயிரம் ரூபா செலவில் புனர மைக்கப்பட்டுள்ளது.

## தெரிவானோர்

திறந்த பல்கலைக் கூ கத்தில் சட்டமானிக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப் பட்டவர்களின் பெயர் விப ரங்களை பிராந்தியத்தில் பார்வையிடலாம் என அறி விக்கப்பட்டுள்ளது (4)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
விஜயகாந் (இரட்டை வேடம்)
பிரபு தேவா, மீனா நடித்த
வானத்தைப் போல
(CD பிரதி)
4 நாட்கள் மட்டும்
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)


# இராசி பலன்

03.02.2000 வியாழக்கிழமை (தமிழுக்கு தை 20)

திரயோதசி மாலை 4.20 வரை: பூராடம் மாலை 5.54 வரை, சித்த யோகம் இராகு காலம் காலை 11.36 முதல் 1.04வரை, சுப நேரம் காலை 7.05 முதல் 8.35 வரை.

**மேடம்:**
தடுமாற்றம், வீண்கவலை, தொழில் போட்டி.

**இடபம்:**
ஏமாற்றம், கபட சிந்தனை, மனக்கஷ்டம்.

**மிதுனம்:**
இனிய நினைவு, பெற்றோர் உதவி, பொதுப்பணி.

**கடகம்:**
கருத்தொருமித்தல், புதிய முதலீடு, பெண் நட்பு.

**சிங்கம்:**
கடுகடுப்பு, சயன சுகக் குறைவு, வைத்தியச் செலவு.

**கன்னி:**
தாழ்ந்த நிலை, தொழில் பாதிப்பு, அலைச்சல்.

**துலாம்:**
கூடிக்குலாவுதல், சுப காரி யச் செலவு, ஆபரணச்சிறப்பு,

**விருச்சிகம்:**
எதிரிகள் சினம், கோப வார்த்தை, அஜீரணக் கோளாறு.

**தனுசு:**
காரிய சித்தி, உல்லாசம், மாமனார் பிரிவு.

**மகரம்:**
மனப்போராட்டம், குடும்பக் கவலை. ஒதுங்கிப் போதல்.

**கும்பம்:**
தொழில்சிறப்பு, விருந்தினர் வருகை, பாராட்டு.

**மீனம்:**
பிறர்க்கு உதவுதல், திருமண யோகம், மனக்களிப்பு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

# செய்தித் துளிகள்

## தபால் பொதிகள் வந்தன

(அச்சுவேலி)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 100 தாபல் பொதிகள் நேற்று யாழ். பிரதம தபாகலத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பா ணத்திலிருந்து பிறமாவட் டங்களுக்குரிய 82 பொதிகள் நேற்று அனுப்பிவைக்கப்பட் டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

## குரங்குகளினால் தொல்லை

மந்துவில் பிரதேச மக்கள் குரங்குகளால் பல தொல்லை களை அனுபுவித்து வருவ தாக புகார் தெரிவிக்கப்படு கின்றது.

இக்குரங்குகள் பல குழுக்க ளாக காணப்படுவதாகவும், ஒவ்வொரு குழுவிலும் 25 குரங்குகள் உள்ளதாகவும் இவை மக்களின் நிரந்தரப் பயிர்களான புளி, முருங்கை போன்றவற்றையும் தோட் டப் பயிர்களையும் சேதம் செய்வதாக மக்கள் விசனம டைவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

அத்துடன் இவை வீட்டுக் கூரைகளின் மேல் ஏறிப் பாய் வதனால் ஓடு, சீற் என்பன உடைகின்றன என்றும் இத னால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (க-29)

## கலந்துரையாடல்

(மானிப்பாய்)

மானிப்பாயில் கிராமிய வைத்தியசாலை நிறுவுவது தொடர்பான கலந்துரை யாடல் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது.

சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபையினால் ஏற் பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி கலந்துரையாடலில் மானிப்பாய் பிரதேசத்தினை சேர்ந்த பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மானிப்பாயில் கிராமிய வைத்தியசாலை அமைப் பதற்கென 25 பரப்புக்காணி அவ்வூர் மக்களால் இலவச மாக வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-90)

## வெற்றிலைக் கொடி அழிவு

(இணுவில்)

அண்மையில் பெய்த மாரி மழை காரணமாக இணுவில், உடுவில், கோண்டாவில் பகுதி வெற்றிலைக் கொடி கள் பெருமளவில் அழிந்து போயுள்ளன.

இதனால் இப்பகுதி வெற் றிலை உற்பத்தியாளர்கள் வெற்றிலைக் கொழுந்துகள் மீள் நடுகை செய்ய வேண் டிய கட்டாயம் ஏற்பட் டுள்ளது.

உள்ளூரில் வெற்றிலை விலை ஓரளவு அதிகரித்துக் காணப்படுவதற்கு இதுவே காரணமென்று நம்பப் படுகிறது. (க-49)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்



## பாலஸ்தீன தனி இராச்சிய பிரகடனம் செப்டெம்பர் 13 இல் அறிவிப்பு

(ஜெருசலேம்)

பாலஸ்தீன அதிபர் யசீர் அரபாத், இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதியில் பாலஸ்தீன இராச்சியத்தைப் பிரகடனப் படுத்துவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பிரகடனப்படுத்துவது தொடர்பான திட்டவட்டமான திகதியை அரபாத் இன்னும் அறிவிக்காத போதிலும்.

சுதந்திரமான பாலஸ்தீன இராச்சியத்தைப் பிரகடனப் படுத்துவதற்கான ஆண்டு இந்த ஆண்டே என யசீர் அரபாத் செய்தியாளர்களிடம் கூறியுள்ளதானது மேற்படி தகவலை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

இதேவேளை, மிக அண்மையில் அமெரிக்காவின் வோஷிங்டன் நகர் சென்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் மற்றும் ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுக்கள் நடாத்திவிட்டு நாடு திரும்பி இருப்பது அறிந்ததே. (க-9)

## பாகிஸ்தான் கொலையாளிகளை கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லவும்

### இந்திய படையினருக்கு உத்தரவு

(புதுடில்லி)

பாகிஸ்தானிய தற்கொலை குண்டுதாரிகளை கண்ட இடத்தில் உடனடியாக சுட்டுக் கொல்லுமாறு காஷ்மீரில் போரிட்டுவரும் படையினருக்கு இந்தியா உத்தர விட்டுள்ளது.

எமது நாட்டிலுள்ள கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டாலும் பாகிஸ்தானிய கொரில்லாக்கள் உயிருடன் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று மேலும் உத்தரவிடப் பட்டுள்ளது.

கார்கில் விவகாரம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டு வரும் அச்ச உணர்வை யடுத்தே இந்திய அரசு மேற்கண்ட உத்தரவை விடுத்திருப்பதாகச் சர்வதேச அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-14)

## உயிருடன் வாழ்ந்தவர் இறந்தவராக பதிவு செய்து நட்ட ஈடுபெற முயற்சி

(லண்டன்)

உயிருடன் வாழ்ந்து வருகின்ற ஒருவர் தன்னை இறந்தவராகப் பதிவு செய்து நட்ட ஈடு பெற முயன்ற சம்பவம் அண்மையில் அம்பலத்துக்கு வந்ததையடுத்து அந்நபர் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு பிரித்தானியாவில் இடம்பெற்ற ரயில் விபத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட இருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதனைப் பயன்படுத்தி, பிரித்தானிய கணனித் தொழிநுட்பவியலாளர் ஒருவர் இறந்தவர் பட்டியலில் தன்னையும் இணைத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக விண்ணப்பித்தார்.

மேற்படி நபரது விண்ணப்பத்தில் குளறுபடிகள் இருப்பதை எவ்வாறோ அறிந்து கொண்ட ஈடு வழங்கும் பிரிவினர் இதனை பொலிஸாருக்கு தெரியப் படுத்தி இருந்தனர்.

இதனையடுத்து 27 பொலிஸார் கொண்ட குழு, மேற்படி நபரின் வீட்டிற்கு விசாரணைகளை மேற் கொள்ளும் பொருட்டு விரைந்து சென்றதில் உண்மை நிலையினை அறிந்து கொண்டனர்.

தற்போது மேலதிக விசாரணைகளின் பொருட்டு குளறுபடி புரிந்த நபர் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். (க-7)

## பசுபிக்கில் விமானம் வீழ்ந்தது சிப்பந்திகள் உட்பட 85 பேர் பலி

(வாஷிங்டன்)

வடஅமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் நகரில் வடமேற்கே பசுபிக் கடலில் லாஸ்கா விமானம் ஒன்று விழ்ந்து விபத்துக் குள்ளானதில் 85 பேர் உயிர் இழந்திருக்கக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விமானத்தில் 80 பயணிகளும் 5 விமானச் சிப்பந்திகளும் பயணம் செய்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல், மெக்ஸிக்கோ நாட்டின் கடற்கரை நகரமொன்றில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் லொஸ்ஏஞ்சல் விமான நிலையத்தில் இருந்து 32 கி. மீ. தூரத்தில் வடமேற்கு திசையில் கடலுக்குள் வீழ்ந்ததாக கூறப்படுகிறது.

இச் சம்பவத்தையடுத்து மீட்புப்பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. 4 சடலங்கள் மட்டும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்திற்கு சதி முயற்சி காரணமாக இருக்கலாம்என நம்பப்படுகின்ற போதும் ஊர்ஜிதப்படுத்தப் பட்ட தகவல் எதுவும் இது வரையில் கிடைக்கவில்லை.

எனினும் புலன்விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. (க-09)

## பனிப்பாறையில்சிக்கிய ஆர்ஜென்டீனகப்பல் அந்தாட்டிக் பகுதியில் சம்பவம்

(புவனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்டீனா நாட்டின் தென் பகுதியில் உள்ள அந்தாட்டிக்கா கடற் பரப்பில் பெருந்தொகையான பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பயணிகள் கப்பல் ஒன்று பனியில் சிக்கிக் கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கப்பலில் 115 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 71 உள்நாட்டுப் பயணிகள் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

கப்பல் பனிப்பாறைகளுக்கிடையே சிக்கிக் கொண்டிருக்கின்ற போதிலும் பிரயாணிகள் அனைவரும் பத்திரமாய் இருப்பதாகவும் அவர்களை மீட்டு வெளியே கொண்டு வரும் முயற்சிகள் தீவிரமாய் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

எதிர்பாராமல் வீசிய கடும் காற்றுக் காரணமாய் இக்கப்பல் அலைக்கழிக்கப்பட்டு பனியில் சிக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. (க-9)

### மனித கல ஆய்விற்கு

## விதிக்கப்பட்ட தடை உத்தரவு உடன் நீக்கப்பட வேண்டும்

### பிரி. விஞ்ஞானி கோரிக்கை

(லண்டன்)

மனிதனை வைத்து செயற்கை கல ஆய்வு நடத்த விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவரான லோட் வின்ஸ்டன் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த தடை நடவடிக்கைகள் மனித உயிர்களைக் காக்கும் ஆய்வு நடவடிக்கையை பாதித்திருப்பதாக தெரிவித்துள்ளதாகவின்ஸ்டன் செயற்கை கல உற்பத்தி மூலம் மனிதன் உருவாக்கப்பட்டால் அது புதிய தொரு உயிரினம் போன்று காணப்பட்டு திடீர் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தவும் கூடும்என்றார். (க-14)

## உலக வலம்

## சைப்பிரஸ் வாகன விபத்தில் இலங்கையரும் பலியாகினர்?

[நிக்கோஷியா]

சைப்பிரஸில் அண்மையில் ஏற்பட்ட வாகன விபத்து ஒன்றில் பலியான அல்லது காயமடைந்தவர்களில் இலங்கையரும் அடங்கக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

36 பேரை ஏற்றிச் சென்ற வானொன்று விபத்துக்குள்ளானதில் 6 பேர் கொல்லப் பட்டதோடு 26 பேர் காயமடைந்துமுள்ளனர்.

சைப்பிரஸின் லிமாஷொல் என்னுமிடத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் சுற்றுலா சென்றுகொண்டிருந்த ஆசியத் தொழிலாளர்களே அதிகளவில் அகப்பட்டுள்ளனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான இந்த வானில் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களே அதிகம் பிரயாணம் செய்திருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையர் எவரும் இச்சம்பவத்தில் பலியாகியதாக அல்லது காயமடைந்ததாக ஊர்ஜிதப் படுத்தப்பட்ட தகவல் எதுவும் நேற்று வரை கிடைக்கவில்லை, (க-14)

## இஸ்ரேலிய படைவீரர் மூன்று பேர் தெற்கு லெபனானில் சுட்டுக் கொலை

(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில், 3 இஸ்ரேலிய வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும். பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

'ஹெஸ்புல்லா மெரீனாக்' என்ற கெரில்லாக் குழுக்களினால் தானியங்கிஆயுதங்கள் ராக்கெட்டுக்களால் ஏவப்படும் குண்டுகள் ஆகியவற்றால் இவ்வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இவ் உயிரிழப்பு பற்றி இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவர் உறுதிப்படுத்திக் கூறியதாகவும், ஆனால் இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் கூறமறுப்புத் தெரிவித்ததாகவும் அறிய முடிகிறது.

இந்த தாக்குதல் இஸ்ரேல்-சிரிய அமைதிப் பேச்சுவார்த்தைகளில் தாமதநிலை ஏற்படக் கூடும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க-5)

### தடைசெய்யப்பட்ட

## நாகலாந்து சோசலிஸ்ட் பொது செயலர் மொய்குவா தாய்லாந்தில் மீண்டும்கைது

(பாங்கொக்)

தடை செய்யப்பட்ட நாகலாந்து தேசிய சோஷலிஸ்ட் பொதுச் செயலர் மொய்குவா தெற்குத் தாய்லாந்தில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த சனிக்கிழமை ஹஜ்லாய் விமான நிலையத்தில் சிங்கப்பூர் விமானம் ஒன்றில் போலிக் கடவுச் சீட்டுடன் கைது செய்யப் பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணைச் செயலர் ஜி. கே. பிள்ளை தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: பாங்கொக்கில் ஹோட்டல் ஒன்றில் பாதுகாப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் வெள்ளிக்கிழமை பாங்கொக்கிலுள்ள மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட போது அங்கிருந்து தலைமறைவாகி மறுநாள் ஹஜ்லாய் நகரில் கண்டு பிடிக்கப் பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 19 ஆம் திகதி அவரின் நெருங்கிய சகாவுடன் தெற்கு கொரியாவில் போலிக் கடவுச் சீட்டுடன் நாட்டினுள்நுழைய முற்பட்ட போது கைது செய்யப்பட்டு 2லட்சம் ரூபா ஜாமீனில் விடுவிக்கப்பட்டதாக ஜி. கே. பிள்ளை மேலும் தெரிவித்ததாக அறிய முடிகிறது.

### பேச்சுவார்த்தை

பாலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேலியக் குடியிருப்புக்களை அகற்றுவதில் இஸ்ரேலியர் காட்டிவரும் கால தாமதம் குறித்து பாலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார்.

## முஜாஹிதீன் கெரில்லா இயக்க தலைவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரின் ஹிஸ்புல் முஜாஹிதீன் கெரில்லா இயக்கத் தலைவர் மன்சூர் அஹமத் இந்திய இராணுவத்தினரால் காஷ்மீர் எல்லைப்பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு கடமைக்காக அமைக்கப்பட்டிருந்த இந்திய இராணுவத்தினரின் படை முகாமை இவர் துவிச்சக்கர வண்டியில் சென்ற வண்ணம் வேவுபார்த்துக் கொண்டிருந்த போதே இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று ஸ்ரீநகரில் இடம் பெற்ற அஹமத்தின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டு இந்தியாவிற்கெதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்றபோதும் பாதுகாப்பு படையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. (க-14)

## இந்தோனேசிய ராணுவ அதிகாரியை உடன் பதவி விலகுமாறு உத்தரவு

(வாஷிங்டன்)

இந்தோனேசிய இராணுவ அதிகாரி ஜெனரல் விராந்தோவை உடனடியாக பதவி விலகக்கோரும் இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட்டின் முடிவுக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவைத்தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சின்பேச்சாளர் எஹிட் பராக் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்.

இந்தோனேசிய அதிபரின் முடிவு சட்டபூர்வமானது மட்டுமல்ல. ஜனநாயகத்தின் ஒரு பகுதியுமாகும்.

ஜெனரல் விராந்தோ உட்பட குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் பதவி விலகுவது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் அதிபரைக் கவிழ்த்து விட்டு இந்தோனேசிய இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றக் கூடும் என உலவி வருகின்ற வதந்தி குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளையில் ஜெனரல் விராந்தோவை பதவி விலகச் சொல்லும் அதிபரின்முடிவால் ஏற்கனவே அங்கு உலவும் ஆட்சிக் கைப்பற்றல் குறித்த வதந்திகள் தீவிரமடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-9)

# இலங்கையின் அவல நிலைக்கு காலனித்துவ ஆட்சி காரணமா?

(கொழும்பு)

இலங்கை நீண்ட காலமாக காலனித்துவ ஆட்சியின் கீழ் உட்படிருந்தமையால் தான் இலங்கைக்கு இன்றைய அவல நிலை ஏற்பட்டது.

இந்திய முன்னாள் பிரதமர் இந்திர்குமார் குஜ்ரால் கொழும்பில் இடம்பெற்ற கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் பிறந்த தின நினைவு கூரும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் சமாதானமும், சமூக நிலையும் தோன்றுவதற்கு அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள அரசாங்கம் முயல வேண்டும்.

மக்கள் யாவரும் தங்களைத் தாங்களே ஆளும் உரிமையும் தமது விவகாரங்களை தாமே கையாளும் தன்மையும் இருக்க வேண்டும் என்றும் —

சமூகங்களுக்கிடையில் சமூக நிலை தோன்ற நாட்டின் சட்டத்துறை பலம் வாய்ந்ததாகவும், நீதித்துறை சுதந்திரமானதாயும் நேர்மை திறமை உடையதாயும் இருக்க வேண்டும்.

அரசாங்கமே சகலவற்றையும் வழங்க வேண்டும் என்ற நிலை எமது சமூகத்தை கட்டி எழுப்பப் போதுமான தல்ல சமூகத்தின் நலன் பேணலும் பல்வேறு பிரிவுகளும் ஒத்துழைப்புடன் சேர்ந்து வாழக் கூடிய விதத்தில் ஒவ்வொரு வருக்கும் கல்வியறிவு புகட்டப்பட வேண்டும் என்றார்

தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய சகல இனத்தவரும் சுதந்திரமாக வாழ வேண்டும் மென விரும்பியவர் நீலன் திருச்செல்வம் என்றும் குறிப்பிட்டார். (க-04)

# இலங்கையில் குடிசன மதிப்பிடல் ஒரு லட்சம் பேர் ஈடுபடுவர்

## -அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் குடிசன மதிப்பீட்டினை நடத்துவதற்காக சுமார் ஒரு லட்சம் அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவர் என தொகை மதிப்பீட்டு புள்ளி விபரவியலாளர் நாயகம் டபிள்யு. ஏ. டி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதற்குத்தேவையான, தொண்டர் தொகை மதிப்பீட்டு அதிகாரி என்ற பதவிக்கு மாவட்ட மட்டத்தில் ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாகவும் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புவரை கல்வி கற்றோர்க்கு இப்பணியில் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

தொண்டர் தொகை மதிப்பீட்டு அதிகாரிகளாகப் பணிபுரிவோர் தேவைகளுக்கு போதுமான அளவு ஊக்குவிப்புக் கொடுப்பனவுள்ள அவர்கள் செயற்படும் காலத்தில் வழங்கப்படவுள்ளது எனவும் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விரைவில் ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் ஆட்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட இருப்பதுடன், ஒவ்வொரு தொண்டர் தொகை மதிப்பீட்டு அதிகாரியும் 80 வீடுகளின் பதிவுகளைக் கவனிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 20 ஆண்டுகளின் பின் இலங்கையில் நாடளாவிய ரீதியில் புள்ளி விபரங்கள் திரட்டும் பணி வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது. (க)

# மக்கள் வங்கி நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப் பட்டதாக அறிவிப்பு

(ஈச்சமோட்டை)

மக்கள் வங்கியில் ஏற்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த42 பேருக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பிதழ்கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

இந்நேர்முகத் தேர்வு வரும் 6ஆம்திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நேர்முகப் பரீட்சைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக்கொழும்பில் இருந்து விசேட அறிவித்தல் ஒன்று தற்போது வந்துள்ளது.

இதனால் நேர்முகத் தேர்வுக்காய் காத்திருந்தவர்கள் பெரும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளார்கள். (க-59)

# விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(அச்சுவேலி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ள விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் விளையாட்டுத்துறை ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாக இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவி இயக்குநர் சிவதெட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

03 வருடங்கள் கொண்ட இப்பயிற்சிக்கு பாடசாலைகளின் ஊடாக அல்லது இளைஞர் மன்றங்களின் ஊடாக தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி முதல் ஆறு இடங்களில் ஏதாவது ஒன்றில் வெற்றி பெற்ற 23 வயதிற்கு உட்பட்ட பாடசாலையை விட்டு விலகிய ஆண், பெண் இருபாலரும் விண்ணபிக்க முடியும்.

இவ்விளையாட்டுப்பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணபிக்க விருப்புவோர் உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

# பயிற்சி நெறி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பொதுமக்களிடையேயான விழிப்பு உணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், தத்தமது வரையறைக்குட்பட்ட அளவிலேயே மீறல்களைத் தடுப்பதற்காக செய்யப்படக்கூடிய சாத்தியப்பாடான விடயங்களை ஆராயும் பொருட்டு யாழ்ப்பாண வை.எம்.சி.ஏ. நிறுவனம் நாளை 4 ஆம் திகதி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி ஒன்றினை நடத்தவுள்ளது.

கொழும்பிலுள்ள மனித உரிமைகளுக்கான இல்லத்தின் சட்டத்தரணி திரு. டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் இலங்கையில் மனித உரிமைகள் குறித்த இன்றைய நிலைபற்றி உரையாடவுள்ளார். (க-77)

# நாளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் சுதந்திர விழா நிகழ்வுகள்

நாளை 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இலங்கையின் 52-வது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ். மாவட்டத்திலும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் சுதந்திர தின நிகழ்வுகள் உரிய முறையில் இடம்பெறும் என்றும் வங்கிகள், திணைக்களங்கள் ஆகியவற்றில் மின் விளக்கு அலங்காரங்கள் செய்ய ஏற்பாடாகி இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதே வேளை யாழ். மாவட்ட பாதுகாப்புப் படையினர் இரத்ததான முகாம்கள் ஏழைகளுக்கு உணவு வழங்குதல், சிரமதானம் ஆகிய பணிகளை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிகிறது. (க-9)

# தீவகத்தில் தொடரும்' 'திருட்டுக்கள்

(மண்கும்பான்)

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடிபெயர்ந்தவர்களது வீடுகளில் உள்ள உடைமைகள் திருடப்படுவது அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக தீவகப் பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வீட்டு மரங்கள், கதவு நிலை, வீட்டுத் தளபாடங்கள் ஆகியன களவாடப்பட்டு உள்ளூரிலே குறைந்த விலையில் விற்கப்படுவதாகவும் இது பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் முறைப்பாடு செய்தும் தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதில்லை எனவும் மக்கள் குறைப்பட்டுள்ளனர். (க-83)

# வவுனியாவிலிருந்து 335 பொது மக்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

(வவுனியா)

வவுனியாவில் இருந்து படையினரின் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு 335 பொதுமக்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வன்னி செல்வதற்கு 500 இற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பதிவு செய்திருந்த போதிலும் 335 பேருக்கே வன்னி செல்லும் அனுமதி கிடைத்துள்ளது. மீதிப் பேர் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தோர், விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பஸ் வண்டிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் வழித்துணையோடு பாதுகாப்புப் பிரதேசமூடாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

## குமார் பொன்னம்பலத்தை சுட்டவர்கள்

# கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட ஜீப் வண்டியில் தப்பிச்சென்றனர்

## - நேரில் கண்டவர் தகவல்

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தை சுட்டுக் கொன்ற 2 பேரும் கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட ஜீப்வண்டியில் தப்பிச்சென்றதை நேரில் கண்டதாக சம்பவத்தை நேரிற் கண்ட இருவர் குற்றத்தடுப்புப் பணியக பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் வசிக்கும் சிங்களவர் ஒருவரும் முஸ்லிம் ஒருவருமே, இவ்வாறு சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற குமார் பொன்னம்பலத்தின் கொலை விசாரணையின் போது தெரிவித்துள்ளனர் என குற்றத்தடுப்புபணியகப் பணிப்பாளர் பந்துளவிக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆட்டோஒன்றைப் பிடிப்பதற்காக தனது வீட்டில் இருந்து வெளிவந்த போது மூன்றாவது வீட்டின் முன்னால் கார்ஒன்றைக் கண்டதாகவும். —

அருகில்நின்ற இருவரில் ஒருவர் கைகைகாட்ட மற்றவர் தனது இடுப்பில் செருகியிருந்ததுப்பாக்கியைஎடுத்துச் சுட்டதாகவும் துப்பாக்கியால் சுட்டவர் தனது துப்பாக்கியை மீண்டும் இடுப்பில் செருகிக்கொண்டு இருவருமாக நடந்து சென்றதைத் தாம்கண்டதாக சிங்களநபர் பொலிசாரிடம் தெரிவித்திருக்கிறார்.

இராமகிருஷ்ண வீதி முடிவில் கறுப்புக் கண்ணாடி பொருத்திய ஜீப்வண்டி ஒன்று நிற்பதைக் கண்டதாகவும், பின்னர் ஜீப்வண்டியைத் திடீரெனக் காணவில்லை எனவும் நடந்துசென்ற இருவருமே அதில்தான் தப்பிச் சென்றிருக்க வேண்டும்என மற்ற முஸ்லிம்நபர் பொலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

இவ்வாறு நேரடியாககண்டவர்கள்தெரிவித்ததை அடுத்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும், கொலைஞர் தப்பிச்செல்லப் பாவித்த வாகனம் குறித்த தகவல் அறிந்தவர்கள்— தமக்கு உடன் தகவல் தருமாறு குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

# உழவு இயந்திர சொந்தக்காரர் 450 பேர்இணைந்துசங்கம் அமைப்பு

(மட்டக்களப்பு)

முதன்முறையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பிரதேசத்திலுள்ள உழவுஇயந்திரச் சொந்தக்காரர்கள் 450 பேர் ஒன்றிணைந்து முதல்தடவையாக சங்கம் ஒன்றினை அமைத்துள்ளனர் வவுணதீவு, சித்தாண்டி, வாழைச்சேனைப் பிரதேசங்களைச் சேர்ந்த உழவுஇயந்திரச் சொந்தக்காரர்கள் இதில் இணைந்துள்ளனர்.

செங்கலடி மத்தியகல்லூரியில் இச்சம்பவம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பிரதேச செயலாளர் ந. ஸ்ரீசங்கர் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கொம்மாதுறையைச் சேர்ந்த பி. கந்தலிங்கம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உழவு இயந்திரக்காரர்களின் பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன. (க-60)

# நேர்முகப் பரீட்சை

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி, தெற்கு மேற்கு பிரதேச செயலகம் நடாத்தும் இரண்டாயிரமாம் ஆண்டிற்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9-30 மணிக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும் என பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (க-23)

# வீதி திருத்தம்

மீசாலையூடாக சாவகச்சேரிக்குச்செல்லும் டச்சுவீதி குன்றும் குழியுமாக இருந்ததினால், பிரயாணிகள் பாடசாலை மாணவர் ஆகியோரின் போக்குவரத்துக்குப் பெருஞ்சிரமமாக இருந்தது. இவற்றை நிவர்த்திசெய்யும் பொருட்டு இவ்வீதி இப்போது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. (க-28)

## 1999-2000ஆம் ஆண்டில் பல்கலையில்

# பதிவு மேற் கொள்ளாதவர்கள் பெயர் விபரங்கள் நீக்கப்படும்

கல்வியாண்டு 1999/2000 இற்கு பல்கலைக்கழக அனுமதி பெற்று இதுவரை தமது பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய சகல பீட மாணவர்களதும் இடங்கள் வெற்றிடமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதில் பதிவாளர் தெரிவித்துள்ளார். (க)

# தமிழ் கைதிகள் மீதான விசாரணை அவ்வப்பகுதியில் இடம்பெறவேண்டும்

## சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களாக விசாரணைகள் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் கைதிகளும் கைதுசெய்யப்பட்ட பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் விசாரணை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

சாவகச்சேரிபிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, குமாரதுங்க மற்றும் நீதி அரசியலமைப்பு இனவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கு விடுத்த அவசர 'பக்ஸ்' செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள், யுவதிகள் குடும்பஸ்தர்கள் குற்றம் புரிந்தவர்களா அன்றி குற்றம் சுமத்தப்பட்டவர்களா என நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணைகள் மேற்கொள்வதன் மூலம் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

1995 ஆம் ஆண்டு சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னரும் அதற்கு முற்பட்ட காலப்பகுதிகளிலும் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் மீது எதுவித விசாரணைகளோ வழக்குத் தாக்கல்களோ இல்லாமல் வருடக்கணக்காக சிறைக் கூடங்களிலும், முகாம்களிலும் அடிப்படை மனித உரிமைகள் அற்ற நிலையில் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் குற்றவாளிகள் யார் நிரபராதிகள் யார் என இனங்காணப்பட்டு நீதி விசாரணைகள் மேற்கொண்டு அப்பாவிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

அண்மைக்காலத்தில் களுத்துறை, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் நடைபெற்ற தமிழ்கைதிகள்மீதான தாக்குதல்கள் மீண்டும் ஒரு கறுத்த ஜூலையினை உருவாக்கிவிடுமோ என தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், பயப்பீதியினையும் ஏற்படுத்தியுள்ளது. [க]

# சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைக்க ஜனாதிபதி சந்திரிகா முயற்சி

## இந்திய பிரமுகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சமஷ்டி முறையிலான ஒரு தீர்வை முன்வைப்பதில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தீவிர முயற்சி மேற்கொண்டுவருவதாக இந்தியப் பிரமுகர் ஒருவர்கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

தெற்காசியாவின் சிறந்த தலைவி அவர் என்றும், சகிப்புத் தன்மை, ஒத்துப்போதல், விட்டுத் கொடுத்தல் போன்ற ஜனநாயக பண்புகள் அவரிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சார்க் அமைப்பு நாடுகளுக்கு இடையில் பிராந்திய ரீதியான ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் சர்வதேச அரசியலைப் பொறுத்தவரையில் நடுநிலைக்கொள்கையாளராகவும் அவர் விளங்குகிறார் என்றார். (க-9)

## பொருட்காட்சி ஒத்திவைப்பு

(புலோலி)

புத்தாயிரம் ஆண்டை வரவேற்பதற்காக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தால் இம்மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த முறை சார்ந்த பொருட்கண்காட்சிகளும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த முறைசாராத பொருட்கண்காட்சிகளும் பின்போடப்பட்டுள்ளதாக வடமராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. அருளானந்தம் அறிவித்துள்ளார். (க-53)

## கல்லூரிக்கு நிதியுதவி

(அச்சுவேலி)

பழுதடைந்த தளபாடங்களைத் திருத்துவதற்கும் மற்றும் புதிய தளபாடங்களை பெற்றுக்கொள்வதற்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு ஜீ.ரீ.சற் நிறுவனத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (க-14)

## பிரதி வெள்ளிக்கிழமை தோறும்

# நாட்டில் சமாதானம் நிலவ பிரார்த்தனை செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல இந்துஆலயங்களிலும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நாடுநலம்பெறவும்.மக்கள் மனநிம்மதியுடன் வாழவும் நாட்டில் தொடர்ந்துஅமைதி, சமாதானம். சுபீட்சம் நிலவ இறை ஆசி வேண்டி, விசேடபூசை ஆராதனை, வழிபாடுகளை செய்யுமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச்செயலாளர் வேண்டுகோள விடுத்துள்ளார்.

மேலும்; பாடசாலையில் ஆரம்ப வழிபாட்டுடன், பஜனை கூட்டுவழிபாடுகள் சிவயோகசுவாமிகள் நற்சிந்தனை பாராயணம் எல்லோரும் மனச்சந்தோசத்துடன் வாழப் பிராத்தனையில் ஈடுபடுமாறு கோரியுள்ளார். (க)

# இயக்கப்படாத நிலையில் கணனிகள் தகுதியான ஆசிரியர் இல்லை

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள மட்டுவில் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், பளை மகா வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகள் இன்னமும் இயங்கப்படாமல் இருந்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இக் கணனிகளை இயங்கச் செய்வதற்கான போதிய தகுதியும் அனுபவமும் உள்ள கணனிப் போதனாசிரியர்கள் இல்லாமையே முக்கிய காரணம் எனவும் அறியப்படுகிறது.

மேலும் இந்த வலயத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், இந்துக் கல்லூரியிலும் கணனிப் பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. (க-77)

# தென்மராட்சியில் 17 பாடசாலைகளில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறை சாராக் கல்விப் பிரிவினரில் இவ் ஆண்டு தென்மராட்சியிலுள்ள 17 பாடசாலைகளில் உடைய மைத்தல் கணனிப் பயிற்சி சுருக்கெழுத்து, தட்டெழுத்து (தமிழ்) வீட்டு மின் இணைப்பு, மோட்டார், கார் திருத்துதல் போன்ற பயிற்சிகள் நடாத்தப்படவுள்ளன.

இப் பயிற்சிகளை நடாத்துதற்கென முறைசாராக் கல்விப் பிரிவு சுமார் 2 இலட்சம் ரூபாவைச் செலவிடப்படவுள்ளதாகவும் முறைசாராக் கல்விப் பணிப்பாளர் திரு. வீ. கே. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சிகள் மூலம் சுமார் 600 பேர் பயன்படவுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. [க-77]

# கைதடியில் சிறப்பாக இடம்பெற்ற சோள அறுவடை பூர்த்தி விழா

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் கமநலசேவைகள் திணைக்களத்துடனும், விவசாயத் திணைக்களத்துடனும் இணைந்து அமுல் செய்திருந்த சோளம் பயிர்ச் செய்கையின் அறுவடை விழா கைதடிப்பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. கே. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யூ. என். டி. பி. நிறுவனத்தின் கருத்திட்ட முகாமையாளர் வைத்தியக்கலாநிதி. எஸ். சிவபாதசுந்தரம். அரச செயலகத்தின் திட்டமிடல் அதிகாரி திரு. கே. பாலகிருஷ்ணன், கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர். திரு. எஸ். சுந்தரேசன். தென்மராட்சிபிரதேச செயலர், திரு. பு. சுந்தரம்பிள்ளை விரிவாக்க உத்தியோகத்தர் திரு. எஸ்.தம்பிராசாஉட்பட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளும் பங்குகொண்டிருந்தனர்.

கைதடி பிரதேசத்தில் 40 விவசாயிகளுக்கு சோளஉற்பத்திக்கான உதவிகள் வழங்கப்பட்டன எனவும் இப்பகுதியில் சோளஉற்பத்தி பெரும் வெற்றியடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்ததுடன் இத்திட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகளையும் பாராட்டினர். என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## செய்முறைப் பரீட்சை

(கரணவாய்)

இங்கை மத்தியஸ்தர் சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டவலைப் பந்தாட்டச் சங்கம் நடத்திய 'சி' தர மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கான செய்முறைப் பரீட்சை இன்று 3 ஆம், 4 ஆம், திகதியும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சார்த்திகளுடைய அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-27)

# கிழக்கு மாகாணத்தில் தொடரும் மழையால் 15 ஆயிரம் ஏக்கர் நெல் வயல் பாதிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் தொடரும் மழையால் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மில்லி மீற்றர் மழை பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடும்மழை காரணமாக அறுவடைக்குத் தயார் நிலையில் இருக்கின்ற சுமார் 15 ஆயிரம் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

# மட்டக்களப்பை சேர்ந்த 07 குருக்கள் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களில் பூசகர்களாக கடமையாற்றி வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த 7 பேர் கண்டி பயங்கரவாதப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பயங்கரவாதத்தடுப்பு சட்டப் பிரிவின் பொலிஸ் பொறுப்பு அதிகாரி எஸ். பூமில தெரிவித்தார்.

பரகல, உடுகல, இரட்டைப் பாதை பன்வில போன்ற பகுதிகளில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் 7 பேரும் மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் உத்தரவின் பேரிலேயே கைது செய்யப்பட்டதாகவும் மேலும் தெரிவித்தார்.

## தொழிற்சாலை ஆரம்பிக்க நடவடிக்கை

(நெல்லியடி)

பனை அபிவிருத்திச் சபை மூலம் அரசாங்கத்தில் இருந்து நிதிபெற்று வினாகிரி உற்பத்தித் தொழிற்சாலை சங்கானையில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி தொழிற்சாலை தேவையான இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-18)

## நிர்வாக தெரிவு

(அச்சுவேலி)

தம்பாலை சிறிமுருகன் சனசமூக நிலைய நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு, சென்றதிங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நிலையத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. (க-55)

# தென்மராட்சியில் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை விரைவில் நிறுவப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் பட்டினிக் கெதிரான நிறுவனமும் இணைந்து தென்மராட்சியில் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இப்பகுதியில் தேவைக்கு மிகையாக உள்ள பழ வகைகள், காய்கறிகள் என்பவற்றை பயன்படுத்தி ஜாம், கோடியல், சோஸ், காய்கறி வற்றல் போன்ற பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளை மேற் கொள்ளப்படவுள்ளன.

இந்த திட்டத்திற்கான செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் சென்ற மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது இதில் மூலதனம், இயந்திர சாதனங்கள், அமைவிடம், சந்தைவாய்ப்பு, ஊழியரிடல், போன்ற பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதாக. சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இத்திட்டத்தின் மூலம். தென்மராட்சியின் பழ உற்பத்தியாளர்கள் நன்மையடைய முடியுமெனவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் மீசாலைப் பகுதியில் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்ற போதிலும் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளவிலேயே இம் மாதம் முதல் வாரமளவில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-21)

தென்மராட்சி நெல் வயல்கள்

# அறுவடை செய்யப்படாவிட்டால் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படும்

## தென்மராட்சி விவசாய சம்மேளனம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் உணவுத் தேவையின் ஒரு பகுதியை தென்மராட்சியில் உற்பத்தியாகும் நெல் வயல்களே பூர்த்தி செய்கின்றன. இந் நிலையில் இப் பகுதி நெல் வயல்கள் அறுவடை செய்யாது விடப்படின் பெரும் பஞ்ச நிலை ஏற்படக்கூடும்.

தென்மராட்சி தெற்கு விவசாய சம்மேளனமும், கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து மேன்மைமிகு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவிற்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தென்மராட்சி தெற்கு பகுதியின் விவசாய கிராமங்களான தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் சுமார் 4500 ஏக்கர் நெல் வயல்கள் அமோக விளைச்சலுடன் அறுவடைக்கு தயாராக உள்ளன.

இப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 850 குடும்பங்கள் கடந்த டிசெம்பர் 11ஆம்திகதி தங்கள் இல்லங்களில் இருந்து எது வித உடமைகளையும் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் இடம் பெயர்ந்து சாவகச்சேரி வலிகாமம் ஆகிய பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

2மாதங்கள் பூர்த்தியாகும். இந்நிலையிலும் தம் வீடுகளுக்குச் செல்ல இவர்களை அங்குள்ள இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. இரு பகுதிகளில் இருந்தும் ஏவப்படும் 'ஷெல்கள்', விமானங்களில் இருந்து வீசப்படும் குண்டுகள் போன்றவற்றால் இப் பகுதி வீடுகளும், நெல் வயல்களும் அழிந்துவருகின்றன. இப்பகுதி மக்கள் அனைவரும் விவசாயத்தை நம்பியே வாழும் விவசாயிகள்.

தமது முழு உழைப்பையும், செல்வங்களையும் கொண்டு ஆக்கப்பட்ட வீடுகளும், நெல் வயல்களும் அழிந்துவருவதை அறிந்து மனம் நொந்து வெறுப்படைந்துபோய் உள்ளனர்.

தமது முழுநேர உழைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை அறுவடைசெய்ய எப்போது அனுமதி கிடைக்கும் என ஏக்கத்துடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

மேலும் இந்த நெல்வயல்களில் வேலை செய்து ஊதியம் பெறும் குடும்பங்களின் கஷ்ட நிலையும் நிவர்த்தி செய்யப்படாதவொன்று. எனவே விவசாயிகள் விவசாயக் கூலியர்கள் வடபகுதி உணவுத்தேவை ஆகியவற்றை உத்தேசித்தாவது இப் பகுதி நெல்வயல்களை அறுவடைசெய்ய உடன் அனுமதி வழங்க ஆவனசெய்யும்படி வேண்டுகின்றோம்.

தங்கள் சாதகமான பதில்களை உடன் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

வீட்டிலிருந்து புறப்பட்ட

# இரு இளம் யுவதிகளைக் காணவில்லை மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

(அச்சுவேலி)

கடந்த மாதம் 11 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இரு இளம் யுவதிகளைக் காணவில்லையென அவர்களது பெற்றோர் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அல்லாரை தெற்கு கொடிகாமத்தைச்சேர்ந்த நடராசா மோகனகாந்தி (வயது 20) கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த அரியரட்ணம் சுஜிதா (வயது 22) ஆகிய இரு யுவதிகளையுமே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரு யுவதிகளும் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற சமயம் எவ்வாறு காணாமற் போனார்கள் என்பது தொடர்பாக தமக்கு எந்த ஒரு தகவலும் இதுவரை கிடைக்கவில்லையென்றும் அவர்களது பெற்றோர்கள் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளனர். (க-14)

# இரவு 9 மணிக்குப் பின்னர் மக்கள் நடமாட படையினர் தடை

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் உள்ள பிரதான வீதிகளில் இரவு 9 மணிக்குப் பின்னர். பொதுமக்கள் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை முன்னிட்டு இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.எம். டியசேன் தெரிவித்துள்ளார். (க-60)

# இருபது லட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை வீதிகள் புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை நகரசபை, நகரசபைப் பகுதியில் முக்கிய 11 வீதிகளை 20 லட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைத்து போக்குவரத்து வசதிகளைச் சீர் செய்துள்ளது.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெரு 2,30 000ரூபா செலவிலும், பன்னக்கட்டி வீதி 1,05,000 ரூபா செலவிலும், வல்லிபுரப் பரியாரியார் வீதி 2,3,0,000 ரூபா செலவிலும், பத்திரகாளி கோவில் வீதி 2,60,000 ரூபா செலவிலும், திகிரி வீதி 84,000 ரூபா செலவிலும், கதிரவேற்பிள்ளை வீதி 160,000 ரூபா செலவிலும், விஸ்வகுல வீதி, 1,75,000 ரூபா செலவிலும், விநாயக மூதலியார் வீதி 2,16,000 ரூபா செலவிலும், 3 ஆம் குறுக்குத்தெரு 1,83,000 ரூபா செலவிலும், பிள்ளையார் கோவில்வீதி 1,47,000 ரூபா செலவிலும், 1ம் 2ம் 3ம் குறுக்கு இணைப்பு வீதி 2,10,000 ரூபா செலவிலும் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. வி. விஜயரட்ணம் தெரிவித்தார். (க-52)

# புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பில் தேர்தல் முறையை எவ்வாறு உள்ளடக்குவது என்பது குறித்து நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை தொடர்ந்து கடைப்பிடிப்பதா அல்லது ஜேர்மன் முறையைத் தழுவிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதா என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின்பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறை தொடர்பாக பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றபோதிலும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை ஒழித்துவிட்டு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது பற்றியும் கூட்டத்தில் பல்வேறுபட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

மேலும் ஜேர்மனியில்நடைமுறையிலுள்ள தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது பற்றியும் கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளில் மத்திய அரசாங்க விடயங்களுக்கான நிரல்களும் பிராந்திய சபைகளுக்கான நிரல்களும் இரு நாள் கூட்டங்களிலும் விரிவாக ஆராயப்பட்டு பூரணப்படுத்தப்பட இருந்ததாகவும் அத்துடன் பிராந்திய சபைகளுக்கான நிதித்துறை அதிகாரங்களும் பூரணப்படுத்தப்பட தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (க-14)

## கட்டடங்கள் புனரமைப்பு

(அல்லைப்பிட்டி)

யு.என்.எச்.சீ.ஆர். நுண் கருத்திட்ட செயற்பாட்டின் கீழ் அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் முக்கிய சிலகட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி புனரமைப்புத் திட்டங்கள் பாடசாலை அதிபர் வீ. ஓங்காரலிங்கம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-46)

# ஏழாலை தெற்கு இளைஞன் அச்செழு இராணுவத்தால் கைது!

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு மயிலங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த குணராசா மோகன் (வயது-31) என்பவர் கடந்த 28 ஆம் திகதி அச்செழுப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இந்த நபர் ஏற்கனவே சுன்னாகம் இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும் அச்சம் காரணமாக செல்லவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஊரெழு இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவரது கைது தொடர்பாக குடும்பத்தாரிடம் ரசீது வழங்கப்பட்டுள்ளது. (க-14)

தீவகத்தில் வாழ்பவர்களும்

# கடற்படையினரின் அடையாளஅட்டை கட்டாயமாக பெறல் வேண்டும்

(தீவகம்)

தீவகத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் இனிமேல் கடற்படையினரின் அடையாள அட்டை பெற வேண்டும் என்னும் புதிய நடைமுறை கடற்படையினரால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன் தற்காலிகப் பாஸ் நடைமுறையே இருந்து வந்த போதிலும் இந்த நடைமுறை தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

இதற்கமைய தீவகத்தில் வாழும் 10 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் முத்திரை அளவிலான 2 கலர்ப் படங்களை, தத்தமது பகுதி கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்குமாறு கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

விசேட அடையாள அட்டை வழங்கும் நடைமுறை ஏற்கனவே காரைநகர், நயினாதீவு, அனலைதீவு போன்ற இடங்களில் அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-75)

## இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மெளண் கார்மல் வீதியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை ஜெனாட் நிமல்ராஜ் (19 வயது) என்பவரை நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணி முதல் காணவில்லையென அவரது சகோதரர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (க-14)

மட்டு.மாவட்டத்தில்

# தரையிலிருந்து கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல தமிழ்ப் பாடசாலைகளில் உயர்தர மாணவர்கள் தரையிலிருந்து கற்று வருகின்றனர் முறக்கொட்டாஞ்சேனை வித்தியாலயத்தில் சுமார் 800 மாணவர்கள் தரையிலிருந்து கற்கின்ற அவலநிலைதோன்றியுள்ளது.

பட்டிருப்பு சரஸ்வதி வித்தியாலயம், ஒல்லிக்குளம் அல்ஹம்றா வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் உயர் வகுப்பு மாணவர்கள் கூட வெறும் மணல் தரையிலிருந்து கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

நகரப்புறத்திலுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு கோடிக்கணக்கில் அபிவிருத்திக்குச் செலவிடும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இப்பாடசாகளில் வசதிகள் குறித்து கவனம் செலுத்துவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-60)

# சிறுவர்களையும் பெண்களையும் தவறாக நடாத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சிறுவர்களையும், பெண்களையும் தவறாக நடாத்துபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக தற்போதுள்ள சட்ட மூலத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக நீதி அரசியலமைப்பு இன விவகார பிரதிநிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கஸ்பாவ மேல் நீதிமன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை திறந்து வைத்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தில் இத்தகைய குற்றங்களுக்கு சரியான தண்டனை வழங்க முடியாதுள்ளது. எனவே அதனைத் தவிர்க்கும் வகையில் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்ட விசேட பணிப்புரையின் பேரிலேயே இத்திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது என்றார்.

## முதன்மை ஆசிரியர் நியமனம்

(அல்லைப்பிட்டி)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர் த. தர்மராசா இம் மாதம் தொடக்கம் தீவக கல்வி வலயத்தில் சமூகக்கல்வியும் வரலாறும் பாடப்புலத்திற்கு முதன்மை ஆசிரியராக நியமிக்கப் பட்டுள்ளார். (க-46)

## நிர்வாகிகள் தெரிவு

(தென்மராட்சி)

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் சங்கத்தானையில் நடைபெற்றது.

இதன் பிரகாரம் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் க. சி. சதாசிவம் உபதலைவர் திரு. செ. சபாரத்தினம், செயலாளர்கள் திரு. மு. தியாகராசா, திரு. க. வயிரமுத்து, பொருளாளர் திரு. த. சி. கந்தையா மற்றும் 12 பேர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (க-77)

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
> கற்றனைத் தூறும் அறிவு.
> - குறள்

## வலம்புரி

### ஆல்போல் தழைக்க

ஆற்றல் வளரவேண்டும். ஆண்மை உயர வேண்டும். வாழ்வியல் செழிக்க வேண்டும். துன்பம் தொலைய வேண்டும். இவை வாழும் இதயங்களின் அவாநிலை அறிவியல் ஏடுகள் அள்ளித் தருவது கருத்தாழம் மிக்க கருத்துக்கருவூலங்களாக அமையவேண்டும்.

ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம் என்னும் நிறுவனம் எம்மிடை செயற்கரிய செய்ய முனைந்து நிற்கிறது. ஆற்றல் என்னும் திங்கள்இதழைதிறம்பட நிர்வகித்து வெளிக்கொணர்கிறது. ஆற்றலுக்கு ரூபா ஐந்தாஎன்று மூக்கின் மேல் விரலை வைக்கத் தோன்றுகிறது. இருபத்து நாலு பக்கங்களும் கொண்டிருக்கும் எண்ணக்கருக்கள் கருதற்குரியவை; கனதியானவை.

எங்கள் மண்ணில் விழைந்த அறிவியல் முத்துக்கள் முனைப்பொடு முகிழ்க்கும் கருத்துக்கள் பக்கச்சார்பாய் நிச்சயம் இருக்காது தானே. உண்மையை உள்ளவாறு உரைக்க உள்ளத்தை ஒழிக்கக் கூடாதல்லா? ஆற்றல் எனும் நாமத்தொடு நம்மிடை மிளிரும் திங்கழிதழ் தரமானது தக்கோர் போற்று தற்குரியது. மிக்காராய் அறிவுப் பசியுடையோர் வளர வாய்ப்பளிப்பது.

அறிவைப் பெறத்துடிக்கும் இளம் சமுதாயத்திற்கு ஆற்றல் நன்கு ஆற்றுப்படுத்தும்விளங்கொளி எனலாம். முளைப்பன அனைத்தும் செந்நெல்லாக இருக்க வகை செய்யும் கருத்துக் கருவூலங்களைக் கொண்டு வலம் வரும் ஆற்றலே நீ வாழ்க என வாழ்த்தாமல்இருக்க முடியாது.

கல்விச் சமூகம் தனது கண்ணியப் பார்வையை மேற்போந்த செயற்பாடுகளுக்குச் செலுத்த வேண்டும். உதவுகரங்கள் நீட்ட வேண்டும்.மலிந்த குப்பைகளுக்கு மனசு திருப்பாது பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்ற நிலையில்லாது செயற்படும் எந்த நிறுவனமும் வளரவேண்டும். அவற்றிற்கு உள்ளத்தால் உயரிய வரவேற்பு அளிக்க வேண்டும்.

தூய உள்ளங்களின் உந்துதல்கள் அவை வாழ வழி வகுக்கும். இங்கு ஒரு கல்லில் இருகனிகள்என்ற நிலை பரிணமிக்கும். தாமும் வளர்ந்து சமூக மேம்பாட்டையும் வளர வைக்கும்.

- அன்புடன் ஆசிரியர்

---

# சிறுவர் பாதுகாப்பு நிதிய ஏற்பாட்டில் நடந்த

# யாழ். சிறுவர் அரங்கக் குழுவினரது பயணம்

## ஓர் அனுபவப் பகிர்வு

ஜெ. தற்பரன்
சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.)
யாழ்ப்பாணம்.

**கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் (ஐ. இ) அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து அனுராதபுரம், திகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறுவர்களுடனான பயணத்தின் போது ஏற்பட்ட அனுபவப் பகிர்வு இங்கு பிரசுரமாகிறது.**

சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐக்கிய இராச்சியம்) யாழ்ப்பாணம் சிறுவர் உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக தமது 16 சிறுவர் கழகங்களிலிருந்து இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு பயிற்சிகளும் வேலைப்பட்டறைகளும் நடாத்தப்பட்டு யாழ். திருமறைக்கலாமன்ற நாடகவியலாளரது உதவியுடன் சிறுவர் அரங்கக்குழு அமைக்கப்பட்டது. இக் குழு ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு சென்றதுடன், கொழும்பு, அனுராதபுரம் போன்ற இடங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி மீளத் திரும்பியுள்ளனர். திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பங்கு பற்றியதுடன் சிறுவர் அரங்கக் குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் அங்கு அமோக வரவேற்பும் கிடைத்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து 25 சிறுவர் அரங்கக் குழு அங்கத்தவர்கள் 02 நாடகவியலாளர்கள் 04 பெற்றோர் உட்பட 31 அங்கத்தவர்களும் கடந்த மாதம் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விமானம் மூலம் பலாலியிலிருந்து அனுராதபுரம் விமான நிலையத்திற்கு பயணித்து மீளவும் இரத்மலானையிலிருந்து பலாலிக்கு வந்து சேர்ந்தனர்.

### பயணத்தின் ஆரம்பம்

பலாலி விமான நிலையத்திலிருந்து அனுராதபுரம் சென்றடைந்த இக்குழுவினரை அதே வயதுடைய சிங்களச் சிறுவர்களும், மாகாண முதலமைச்சர் உட்பட அமைச்சரவை அங்கத்தவர்களும் சேர்ந்து வரவேற்றது எம்மை வியப்பில் ஆழ்த்தியது. யாழிலிருந்து சென்ற சிறுவர்கள் எவருக்கும் சிங்களமோ அன்றி அங்கிருந்தவர்களுக்கு தமிழோ தெரிந்திருக்காத சூழ்நிலையிலும், கைகளினாலும், தமது அங்க அசைவுகளினாலும் பல்வேறு சைகைகளினை (உடல் வழிமொழி- Boby Longnage வெளிக்காட்டி சில நிமிடங்களுக்குள் தமக்கிடையே ஒரு புரிந்துணர்வை, ஒரு ஊடக மொழியை உருவாக்கி நல்லதொரு உறவு முறையினை அமைத்துக் கொண்டனர். தம்மிடையே கைலாகு கொடுத்து தமது நட்பை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டனர்.

விமான நிலையத்திற்கு வருகை தந்த சிறுவர் குழுவை வரவேற்ற மத்திய மாகாண முதலமைச்சர் கௌரவ பேட்ழி பிறேம்லால் திஷநாயகா அவர்களது ஏற்பாட்டில் அநுராதபுரத்தில் அமைந்திருந்த மிகப்பிரபல்யமான விடுதி ஒன்றில் சிறுவர்கள் தமக்கான இரவுப் போசனத்தினை முடித்துக் கொண்டு அங்கு நடைபெற்ற கலாசார நிகழ்விலும் பங்கு கொண்டனர்.

### நாடகத்தைப் பார்த்து அழுத நூலகர்

மறுநாள் அநுராதபுரத்தில் மிகுத்தலை போன்ற புரதான நகரங்கள், தூபராம விகாரை போன்ற பிரமாண்டமான விகாரைகள் உட்பட பிரசித்திபெற்ற இடங்களினை சுற்றிப்பார்த்த இக் குழுவினர் இரவு வேளையின் போது அநுராதபுரம் விமான நிலையத்தில் வரவேற்ற சிறுவர்களுடன் சேர்ந்து கலந்துரையாடல், கலாச்சார நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளினை நடாத்தினர். யாழ். மாவட்டத்தில் சிறுவர்களது நிலையை வெளிப்படுத்தும் ''அரும்புகளின் ஏக்கம்'' என்ற குறும் அபிநய நடனம் ஒன்றினையும் எமது சிறார்கள் பல இடங்களிலும் மேடை ஏற்றி பலரது பாராட்டுக்களினையும் பெற்றனர்.

அவ்வகையில் அநுராதப்புரப் பாடசாலை ஒன்றில் மேடை ஏற்றப்பட்ட இந் நாடகத்தினை சுருக்கமாக சிங்கள மொழியில் மொழி பெயர்த்த அப்பாடசாலை நூலகர் (இவர் தமிழ், சிங்களம் சரளமாகப் பேசக்கூடிய பெண்மணி) குறிப்பிட்ட நாடகத்தினைப் பார்த்த பின்பு தொடர்ச்சியாக அரைமணித்தியாலயங்களுக்கு மேலாக அழுத வண்ணமே இருந்தமை அனைவரையும் சற்றுநேரம் மௌனிக்கச் செய்த விடயமாய் இருந்தது. அந்நூலகரது கணவன் தற்போதும் விமானப்படையில் கடமையாற்றுவதனால் ''யுத்தம் வேண்டாம்'' என நாடகத்தில் சிறுவர்கள் குறிப்பிடும் பாடல் தன்னை மட்டுமன்றி யுத்தத்தில் பங்குகொண்டுள்ள சகல மக்களினது பிரதிபலிப்பாகவும் உள்ளது. அதனால் என்னை மறந்து அழுது விட்டேன் என கருத்துத் தெரிவித்தமை நோக்கத் தக்கது.

அதே பாடசாலையில் நடைபெற்ற மற்றுமொரு நிகழ்வில் சிறுவர்கள் அனைவரும் பெற்றோர் ஆசிரியர் சார்பில் சிலரும் சேர்ந்து சமாதானத்தின் சின்னமான சமதானப் புறாக்களையும் பறக்க விட்டனர். இந்நிகழ்வுகள் யாவும் ''பாண்ட்'' (பாடசாலை மாணவர்களது) மரியாதை அணிவகுப்புடன் ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது.

### நெஞ்சை நெகிழ வைத்த கலந்துரையாடல்

சிறுவர்கள் குழுக்களுடன் நிகழ்வுகளினை நடாத்தி மகிழ்வாக இருந்த குழுவினருக்கு மறுநாள் அதைவிட இனிப்பான விடயம் காத்திருந்தது. ஆம், மீண்டும் விமான் நிலையத்தில் வரவேற்ற சிறுவர்களுடன் சேர்ந்து நாடகம் சார் கலை கலாசார நிகழ்வுகளினையும், கலந்துரையாடல்களினையும் நடாத்தும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவை அனுராதபுரத்தில் அமைந்திருந்த ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சிகள் யாவும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ''ராயாட்டசேவய'' என்னும் தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பானது.

மேற்படி கலந்துரையாடலில் மொழிபெயர்ப்பாளரது துணையுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர். இவற்றில் பல நெஞ்சை உருக்குவனவாகவும்காணப்பட்டன. அவற்றில்சில வருமாறு; -

★ ''உங்கள் ஊரிலும் மிதிவெடிகள் உள்ளனவா? யாழில் அது பெரிய பிரச்சினை''

★ ''உங்களுக்குஊரடங்கு இருக்கிறதாலாவெளியில் இரவில் வெளிக்கிட ஏலாது''

★ ''இங்கு எல்லைப்புற கிராமங்கள் சிலதில் மட்டும் மிதிவெடிகள் உள்ளது எனக் கூறுகின்றனர்.

ஆனால் அதுபற்றி எமக்குத் தெரியாது ''நாங்கள் இங்கு இரவிலும்திரியலாம்எனஎடுத்துக் கூறப்பட்டது'' போன்ற யதார்த்த நிலைகள் இரு குழுவினாலும்- சைகைகளினால் கதைத்த வேளையிலும் கூட நெருக்கமாக காணப்பட்ட இவர்களினை பிரித்து இருப்பிடங்களுக்கு கூட்டிச் செல்வது என்பன இக்கலந்துரையாடலில் பின்பு மிகவும் கடினமானதாக மனதுக்கு வேதனையூட்டுவதாக அழைத்துச் சென்ற எங்களுக்கு ஏற்பட்டது. அதனாலேயோஎன்னவோ அழுதவாறே சூழ் நிலையில் இருந்து இருப்பிடங்களுக்கு வந்த பின்பும் தத்தமது அறைகளில் இருந்தாலும் விசும்பல் சத்தங்களினையும் இடையிடையே தமது சிங்கள நண்பர்களது பெயர்களினை நள்ளிரவிலும் ஆழ்ந்த நித்திரையிலும் கூறுவதினையும் எம்மால் கேட்க முடிந்தது. இவ்வாறாக பயணக்குழு அனைவருக்கும் அந்நாளில் இரவுப் பொழுது ''இது தான் வாழ்வு'' என்கின்ற நிலையில் கழிந்தது.

### திருகோணமலை பயணமானோம்

மறுநாள் காலை திருகோணமலை நோக்கி பயணமானோம். நீண்ட பயணமாக அமைந்திருந்தமையினால் கூச்சல் கும்மாளத்திற்கு குறை இருக்கவில்லை. தமது இருக்கையில் தூங்கிக் கொண்டிருந்த சில நண்பர்களைத் தட்டியெழுப்பி, பாட்டுக்களை மாற்றியும் புதிது புதிதாய் இயற்றியும் பாடியவாறு மகிழ்வாகப் பயணமானார்கள். இங்கு பாடப்பட்ட பாடல் சிறுவர்கள் மகிழ்வைப் படம் பிடித்துக் காட்டியது.

இங்கு பாடலில் வந்த 'ஆசானின்' கதையே தனி அலாதியானது. இவன் மட்டும் சிங்களச் சிறுவர்களில் மிகவும் வித்தியாசமாக அனைவருடனும் ஐக்கியமாக பழகியவன் என்றே கூறவேண்டும். அனைத்து அனுராதபுரத்துச் சிறுவர்களும் அனுராதபுரத்தை விட்டு நாம் புறப்படும்போது அழுது இருந்தாலும் இவன் மட்டும் அவர்களைவிடச் சற்று அதிகமாகவே அழுது விட்டான். யாழ்ப்பாணக்குழு அங்கத்தவர்களில் ஒரு சகோதரியிடம் விக்கித் தனது பிரிவுத் துயரைக்கூறி அழுததை குழுவிலே இருந்த சுட்டிப் பையன் முத்து கண்டு அனைவருக்கும் கூறிவிட்டான்.

(நாளையும் தொடரும்)

---

## சாயி அருளமுதம்

### தனிமனித ஆசைகள்



தெய்வத்தை மறந்து விட்டதால், தான் இந்நாளில் மனிதன் இவ்வுலகச் சிக்கல்களில் கட்டுண்டு வாழ்க்கையில் விரக்தியடைகிறான். அதிகமான செல்வம் இருப்பதால் மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான். இந்தத்தேசம் பல வீனப்பட்டுப் போனதற்குக் காரணம் தனிமனித ஆசைகளே!

தெய்வத்தை மறந்து, உலகியல் செல்வங்களோ உயர்ந்ததெனக் கருதி மாயையில் வீழ்ந்து கிடக்கின்றான் மனிதன். தெய்வம் என்பதையே முழுமையாக மறந்துவிட்டான். அதனால் மனித வாழ்க்கை என்பது முழுமையும் வீணானதொன்றாக மாறிப்போயிருக்கிறது. இங்கு மனிதர்கள் இருக்கிறார்களே தவிர மனிதகுண நலன்கள் முழுமையாகக் காணப்படவில்லை. உருவத்தில் தான் அவன் மனிதனாக இருக்கிறானே தவிர நடத்தையில் மனிதனாக இல்லை. எல்லோரும் பக்தர்களாகவே காட்சியளிக்கிறார்கள். பேசுவதும் பக்தர்களைப் போலவே பேசுகிறார்கள். இந்த பக்தி எல்லாம் தற்காலிகமான பக்தி. இதில் அபூர்வமான நம்பிக்கை காணப்படுவதே இல்லை.

இடை இடையே சுயநலமும் சுயலாபமும் பற்றிய எண்ணங்கள் வேறு குறுக்கிட்டு உண்மையான இயல்பையே மறக்கச் செய்கின்றது.

- பாபா

# மிருசுவில் படித்தமகளிர் திட்டத்திற்கு மீண்டும் வ.பி.போ.சபையின் பஸ்சேவை

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திற்கான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை மீளவும் இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் திரு.வி.எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இச் சேவையினால் இப்பகுதி மக்களும், மாணவர்களும், விவசாயிகளும் அப்பகுதியில் அமைந்துள்ள துர்க்கை அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் அடியார்களும் நன்மை அடைவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த பஸ் சேவையானது காலை 6.30 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து ஆரம்பித்து 7.10 மணிக்கு மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தைச் சென்றடையும். அங்கிருந்து 7.30 க்கு புறப்பட்டு 8.15க்கு சாவகச்சேரியை வந்தடைந்து காலை 9.15 க்கு யாழ்ப்பாணத்தை அடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து 10.20 மணிக்கு புறப்பட்டு 11.50க்கு படித்த மகளிர் திட்டத்தை அடைந்து அங்கிருந்து 12.20க்கு யாழ். நோக்கி மீண்டும் 2.05 க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்திலி 3மணிக்குப் புறப்படும் 3வது பஸ்சேவை 4.35 மணிக்கு படித்த மகளிர் திட்டத்தைச் சென்ற பின் மாலை 5.35 மணிக்கு சாவகச்சேரியில் தரித்து நிற்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ந)

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வன்னியிலிருந்து மக்கள் வருகை

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலிருந்து 535 பேர் நேற்று புதன் காலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்துள்ளார்கள்.

இவர்களை நேற்று இரவு வவுனியாவுக்கு அழைத்து வந்த படையினர் சனச தற்காலிக நலன்புரி நிலையத்தில் தங்க வைத்துள்ளனர் வன்னியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தவர்கள் வருவதற்கு படையினர் எத்த விதத்தில் தடையாக இருக்க மாட்டார்கள் என தெரிவிக்கும் அதிகாரிகள் வன்னிப் பயணிகள் வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டுமே இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அனுமதித்து வந்தனர்.

வந்து சேர்ந்தவர்களில் மன்னாருக்கு செல்லவேண்டியவர்களும், கொழும்பு போன்ற வேறு மாவட்டங்களுக்குசெல்பவர்களும் அடங்கியுள்ளார்கள் ஆனால் இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்தவர்கள் என்றே கணிக்கப்பட்டிருப்பதாக வேறு இடங்களிற்கு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவே அனுமதிக்கப்படுவார்கள் என சிரேஷ்ட சிவில் அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

# யாழ். மாநகர சபையின் மேயராக கந்தையன நியமிக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாநகர சபையின் மேயராக திரு. செல்லன் கந்தையன் தேர்தல் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனம் பற்றி வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

யாழ். மாநகரசபையின் மேயராக இருந்த பொ. சிவபாலன் சுட்டுக்கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த மேயரை நியமிப்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி தாமதித்து வந்தது.

தற்போது மாநகர சபையின் உறுப்பினரான திரு. கந்தையனை சபையின் மேயராக நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வளர்மதி...

ஆனந்தராசா, உரும்பிராய் மேற்கு (ஜே. 268) கிராம சேவையாளர் இ.ஏ. மகாலிங்கம் யாழ். கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.வரதராஜா, வலம்புரி, உதயன் பத்திரிகையாளர்கள், காங்கேசன் துறை பொலிஸ் நிலைய தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் டபிள்யூ உம்கிரி, பிரிகேடியர் மொகான் புறொவ்வூட், பலாலி இராணுவ முகாம் தலைமையக பாதுகாப்பு அதிகாரி மேஜர் மக்தா, கொழும்பிலிவிந்து வந்த உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

## பிள்ளைகள்...

கோ ஆளாக்கவில்லை. நான் எனதுபிள்ளைகளான்விேனாத், பிரியா ஆகிய இருவரையும் அவர்களது பாது காப்பு, உணவு என்பவற்றிற்காகவே அவர்களையும் கொழும்புக்கு அழைத்துச் சென்றேன். என்றும் அங்கு எம்மை விளக்க மறியலில் வைக்காமல் தனிப்பட்ட வீடு ஒன்றில் தங்க வைத்து நல்ல முறையில் பராமரித்தார்கள் என்று கூறினார்.

## முன்னாள்....

செய்ய வசதியாக தண்டனையை இடை நிறுத்தி வைத்ததன் மூலம் இவர்கள் சிறை செல்வதற்கு இடமளிக்கப்படவில்லை.

இதனால் ஜெயலலிதாவின் அரசியல் வாழ்வு அஸ்தமிக்கச் சந்தர்ப்பம் இல்லைஎன அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்

இது குறித்து கருத்துத் தெரிவித்த தமிழாக முதலமைச்சர் மு. கருணாநிதி கடந்த சட்டசபைத் தேர்தலில் ஊழலுக்கு எதிராக மக்கள் அளித்திருந்த தீர்ப்பினை அரசு நிறைவேற்றியுள்ளது எனத் தெரிவித்தார்.

## தனங்களப்பு...

தலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் தமது தரப்பில் 3 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்று நண்பகல் முதல் தொடர்ந்து ஷெல் சத்தங்கள் தனங்களப்புப் பகுதியில் கேட்டவண்ணமிருந்தது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வடக்குக் கிழக்கு மாகாண

# ஆசிரியர்களின் நிலுவைப் பணம் ஆறு மாதங்களுக்குள் வழங்கப்படும்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட அனைத்து ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளையும் அடுத்து வரும் ஆறு மாதங்களுக்குள்கொடுத்துத் தீர்ப்பதற்கு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கணக்காளர்கள் உடன்பட்டுள்ளனர்.

ஆசிரியர்களின் சம்பள நிலுவை தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்திற்கும் அமைச்சின் பிரதம கணக்காளர்கள் திரு.எஸ். சுகுணதீரன், திரு. ஆர். துரைசிங்கம் ஆகியோருக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போதே இம் முடிவு எடுக்கப்பட்டது.

ஆசிரியர்களின் பதவி உயர்வு மாற்றம் வேறு வழிகளால் கிடைக்கவேண்டியநிலுவைத் தொகையைஆறு பகுதியாகப் பிரித்து இம் மாதம் தொடக்கம் ஆறு மாதங்களுக்குள் கொடுத்துத் தீர்க்கப்படுமென உடன்பாடு காணப்பட்டது.

ஆசிரியர்களின் நிலுவைப் பணத்தைக்கொடுத்துத் தீர்க்கவென மத்திய அரசு 36 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதே சமயம் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர்களின் நிலுவைப் பணத்தைக் கொடுத்துத் தீர்க்க வேண்டுமென மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா ஆளுநர் ஊடாக மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-102)

### சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்

# பாதுகாப்பு முன்னேற்பாடாக 150 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

நாளை நடைபெறவிருக்கும் 52வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களை ஒட்டி கொழும்பு நகரத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கோட்டை ஜெயவர்த்தன புர பாராளுமன்ற மைதானத்தில் இம்முறை அடக்கமாக ஆடம்பரமற்ற முறையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னோடியாக வெலிக்கடை ராஜகிரிய ஆகிய பகுதிகளில் தேடுதல் நடாத்தி 150 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்ட அவர்களை ஏழு நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட 150 இளைஞர்களுள் பெரும்பாலானவர்கள் மலையகத் தமிழ் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கைதுகள் தொடர்பாக ஆர் யோகராஜன் எம்.பி தொல்லை தவிர்ப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### தனங்களப்புப் பிரதேசத்தில்

# நெல் அறுவடை செய்வதற்கு உதவுக யூ. என். எச். சி. ஆரிடம் கோரிக்கை

[சாவகச்சேரி]

தென்மராட்சியில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அமைப்பு தனங்கிளப்பில் அறுவடைக்கு தயாராக உள்ள 2500 ஏக்கர் நெல்லினை அறுவடை செய்ய சம்பந்தப்பட்ட இருதரப்பினரோடும் தொடர்பு கொண்டு ஓர் இணக்க நிலையினை ஏற்படுத்தித் தருமாறு யூ. என். ஏச். சீ. ஆர். வெளிக்கள உத்தியோகத்தர் ஜோன் டிக்சனிடம் கேட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பாக அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன் தென்மராட்சி பிரதேச செயலர் திரு பு. சுந்தரம்பிள்ளை உதவி சமநல சேவைகள் ஆணையாளர் திரு சுந்தரேசன் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் அடிகளார் ஆகியோரிற்கும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை இவ்வமைப்பின் தலைவர் உட்பட ஆறு பேர் தனங்கிளப்பின் ஒருபகுதி வயல்களை பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். நெல் அறுவடை தொடர்பாக சாவகச்சேரியில் உள்ள 521 பிரிகேட் படைப்பிரிவின் கேணல் வேயிகமவை விவ்சாய அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது தனங்களப்பு வீதிக்கு கிழக்காக படையினர் தற்போது அமைத்துள்ள முட்கம்பி வேலிகளிற்கு அப்பால் 200 மீற்றர் நீள பிரதேசங்களில் உள்ள நெல் வயல்களை அறுவடை செய்ய அனுமதித்துள்ளார். ஏனைய பகுதிகள் தமது பிரிகேட்டில் இல்லையென அவர் தெரிவித்ததாகவும் தென்மராட்சி பாதிக்கப்பட்ட விவசாயிகள் அமைப்பின் தலைவர் பி. வி. இராஜரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை தனங்களப்பு வீதிக்கு மேற்காக உள்ள வயல்களில் ஒரு பகுதியும் மறவன்புலோ பகுதி வயல்களும், நுணாவிலூடாக சென்று விவசாயிகள் அறுவடை செய்வதாக தெரியவருகிறது.

## கொழும்பில் எம்...

கவைத்து நன்கு உபசரித்து தங்கள் விசாரணைகளை மேற்கொண்டனர், முதலில் தற்கொலைக் குண்டுதாரியின்படத்தைக் காண்பித்து பின்அவரின் தலையையும் என்னிடம் காட்டினர். அது எனது மகன் அசோக்கினுடையது என நான் அடையாளம் காட்டினேன்.

அதன் பின் மரபணுப் பரிசோதனையில் இரத்தம் நன்றாகவே இருந்தது, ஜாஎல குண்டுவெடிப்பில் எனது மகன் தான் கொல்லப்பட்டவர் என்று அடையாளம் கண்டுகொண்டேன்.

எனது மூத்தமகன் அசோக் யழ். இந்துக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது 1995ம் ஆண்டளவில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். எனது கணவர் தற்போது வெளிநாட்டில் அதாவது சுவிஸில்வசித்து வருவதால் எங்களுக்குத் தேவையான பணத்தை அனுப்பிவருகிறார்.

நாங்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின் இங்கு நடை பெறும் ஒவ்வொரு சம்பவங்களையும் தொலைபேசி மூலம் எனது சகோதரி எனக்கு அறியத்தந்தார். இவ்வாறு திருமதிவ. ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

(வ)

# தாய் சொல்லைத் தட்டாது கல்வியில் அக்கறை செலுத்துங்கள்

### யாழ். தளபதி அறிவுரை

தாய் சொல்லைத் தட்டாமல் அவருக்குக் கீழ்படிந்து கல்வியில் அக்கறை செலுத்திப் படித்து முன்னேற வேண்டும். இவ்வாறு உரும்பிராய் மாணவர்கள் பிரியா, விேனாத் ஆகியோரின் விடுதலையின் போது யாழ். குடாநாட்டுக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சூலசெனிவிரத்தினா இருவருக்கும் புத்திமதி கூறினார்.

அவர் மேலும் திருமதி ஸ்ரீஸ்கந்தராசாவிடம் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் அவதானமாக இருந்து அவர்களை நல்வழிப் படுத்தி நாட்டின் நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

(வ)

# கற்றலில் செயல்பாட்டில் உடன் ஈடுபடுக வ. மா. அதிபர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டு பாடசாலைக் கற்றல் செயல்பாட்டில் உடன் ஈடுபட வேண்டுமென வட மாகாண அதிபர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது,

சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. இராசதுரை விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது மக்களின் தனிப்பெரும் சொத்தாகிய கல்விக்கு ஊறு விளைவிக்கும் எவரையும் தமிழ்ச் சமூகம் பொறுத்துக் கொள்ளாது.

யுத்த நெருக்கடிகளினால் ஏற்கனவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவாகள் தொடர்ந்தும் கல்விச் செயற்பாட்டில் பாதிக்காதவாறு நாம் எல்லோரும் பாடுபட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை உரும்பிராய்ப் பகுதியில் கைது செய்யப்பட்ட மாணவர்களின் விடுதலைக்கு உதவிய அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.